**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை: திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 08 ஆம் நாள் செவ்வாய்கிழமை</u>

**<u>ஐ.ஏ.எண்.03/2019 Renumbered as ஐ.ஏ.05/2022 இன்</u>**

**<u>அ.வ.எண்.33/2019</u>**

1) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், S.குமாரபாளையம், மாப்பிள்ளை கவுண்டர்புதூர் அஞ்சல், கதவு எண்.6/62–ல் வசிக்கும் இந்து சுமார் 63 வயதுடைய லேட்.ராமசாமி முதலியார் மகன் R.வேலுச்சாமி.

2) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், S.குமாரபாளையம், மாப்பிள்ளை கவுண்டர்புதூர் அஞ்சல், கதவு எண்.6/62–ல் வசிக்கும் இந்து சுமார் 61 வயதுடைய லேட்.ராமசாமி முதலியார் மகன் R.ரத்தினசாமி.

(இ.ம.எண்.4/2021 நாள்:21.10.2021 உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டது)

... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மாப்பிள்ளை கவுண்டர்புதூர் அஞ்சல், ஆ.சங்கம்பாளையம் கிராமம், பாலாஜி நகர், கதவு எண்.3/232–ல் வசிக்கும் இந்து சுமார் 46 வயதுடைய லேட்.கந்தசாமி மகன் K.செந்தில்குமார்

... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 28.02.2022 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்களின் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.E.N.துரை அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

மனு தாக்கல் நாள் : 28.01.2019

இம்மனுவானது, தாவா சொத்துக்களில் உள்ள பௌதீக தன்மைகளையும், அதில் உள்ள தன்மையினையும், 15.12.1970 தேதியிட்ட கிரய ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்களின்படி, பார்வையிட்டும், ஒரு தகுதி வாய்ந்த நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தினை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இறுதி உத்தரவு</u>**

1. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**

<u>மனுதாரர் தரப்பில்</u> <u>எதிர்மனுதாரர் தரப்பில்</u>

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>சொத்துவிபரம்</u>**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்–பதிவகம், பொள்ளாச்சி தாலூக்கா, புரவிபாளையம் தாக்கல், சேர்வைக்காரன்பாளையம் கிராமத்தில்,

க.ச.எண்:75 மத்தியில் தென்வடல்:12 லிங்ஸ், கிழமேல் 166–லிங்ஸ் இந்தளவுள்ள பு.ஏக்.0.01 செண்ட் பூமி பூராவும். அதிலுள்ள வண்டி ஓட்டும் தடம் பாத்தியம் மற்றும் தடத்தில் பாசனத்திற்காக சுமார் 6 அடி ஆழத்தில் போடப்பட்டுள்ள பைப் லைன்கள் முழுவதும்.

**<u>நான்கொல்லைகள் மற்றும் அளவுகள் விபரம்:</u>**

மயிலாத்தாள் பூமிக்கும் – கிழக்கு,
துளசியம்மாள் பூமிக்கும் – மேற்கு,
ராமசாமி முதலியார் பூமிக்கும் – தெற்கு, வடக்கு.

இதன் மத்தியில் தென்வடல்:12 லிங்ஸ், கிழமேல் 166 லிங்ஸ் இந்தளவுள்ள பு.ஏக்.0.01 செண்ட் பூமி பூராவும்.

மேற்படி சொத்தானது சேர்வைக்காரன்பாளையம் கிராம பஞ்சாயத்திற்கும், பொள்ளாச்சி யூனியன் எல்லைக்குட்பட்டது.

**(ஒப்பம்)/– P. சுபாஷினி**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.